දුරකථන
தொலைபேசி
Telephone
2369800
2369297
2368539

ෆැක්ස්
பெக்ஸ்
Fax
2369297

කම්කරු දෙපාර්තමේන්තුව
කාන්තා ළමා කටයුතු අංශය
DEPARTMENT OF LABOUR
Women's and Children's Affairs Division
தொழில் திணைக்களம் பெண்கள், சிறுவர் விவகாரப் பிரிவு

මගේ අංකය : WCA/02/01/N.A./2020
எனது இல:
My No:

ඔබේ අංකය :
உமது இல
Your No.

මෙහෙවර පියස , කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
மெகவர பியச, கொழும்பு 05, இலங்கை
Mehewara Piyasa, Colombo 5, Sri Lanka

2020.11.04

கைத்தொழில் வர்த்தக தொழில்கொள்வோர்களுக்கு,

**<u>இரவுநேர வேலைக்கான அனுமதியை நீடித்தல்</u>**

கைத்தொழில் வர்த்தக நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள பெண் தொழிலாளரை இரவுநேர வேலையில் ஈடுபடுத்துவது தொடர்பாக, உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள, தொழில் ஆணையாளர் அதிபதியின் முன்னைய அனுமதி 2020.09.01 தொடக்கம் 2020.12.31 வரையான காலப்பகுதியினுள் முடிவுக்கு வருமாயின், அவ்வாறான அனுமதி 2020.12.31 வரை செல்லுபடியாகத்தக்க வகையில் தொழில் ஆணையாளர் அதிபதியிடமிருந்து விசேட அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.

02. நாட்டினுள் தற்போது காணப்படுகின்ற கொவிட்-19 நோயைக் கருத்திற்கொண்டு, இவ்வாறான நிர்வாகத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை உரிய அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ள நிறுவனங்களுக்கு மாத்திரமே இந்த நீடிப்பு செல்லுபடியாகும் என்பதையும் அறியத்தருகிறேன். இந்தக் காலப்பகுதியினுள் பெண் ஊழியர்களை இரவு வேலையில் ஈடுபடுத்துவது தொடர்பான நிபந்தனைகள் உங்களால் மீறப்பட்டால், ஏற்கனவே உங்களுக்குத் தரப்பட்டுள்ள இந்த அனுமதியை இரத்துச் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மேலும் தெரிவிக்கின்றேன்.

03. இதன் பிரகாரம், 2020.12.31 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்குரிய தேவை இருந்தால், அல்லது, உங்களது வர்த்தகம் தொடர்பாக பெண் ஊழியர்களை இரவுநேர வேலையில் ஈடுபடுத்தும் தேவைக்கான புதிய அனுமதி பெறப்பட வேண்டியிருந்தால் மாத்திரம், நிகழ்நிலை முறைமையின் கீழ் அனுமதியைக் கோரும்படி மேலும் கேட்டுக்கொள்கிறேன்.

மாதவி. என். குணவர்தன
தொழில் ஆணையாளர்
பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவு

பிரதி: சகல பிராந்தியப் பிரதி ஆணையாளர்களுக்கும், மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர்களுக்கும் - உரிய நடவடிக்கைக்காக.